www.tamilarangam.net

# சிந்தனை

மாசி இல: 1/85



## சர்வதேச பெண்கள் தினம்
## மார்ச் 8



SINTHANAI. FEB/MARCH 1985.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆசிரியர் கருத்து

ஒடுக்கப்பட்டுவரும் தமிழ் மக்களுக்கும், ஒடுக்குமுறையாளர்களுக்கும் இடையில் தொடர்ந்துவரும் போராட்டத்தில் இன்றுவரை தமிழ் மக்கள் அழிவினை மட்டுமே சந்தித்துக்கொண்டு வருகின்றார்கள். இற்றைவரை தோன்றிய 34க்கு மேற்பட்ட தமிழ் தேசிய விடுதலை இயக்கங்களில் TELO, EROS, EPRLF போன்ற இயக்கங்கள் தன்னகத்தே புரட்சி உணர்மை மிக்க தோழர்களையும் சடத்துவ சக்திகளையும் கொண்டுள்ளன என்பதை பெரும்பான்மையான தமிழ் மக்கள் அங்கீகரிக்கின்றனர்.

பொது எதிரியைத் தோற்கடிக்க ஐக்கியப்பட்ட பலமான அமைப்பொன்று தமிழ் மக்கள் மத்தியில் ஸ்தாபனமயப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் வேறுபட்ட கருத்து இருக்கமுடியாது. இந்த வகையிலே TELO, EROS, EPRLF ஆகிய மூன்று இயக்கங்களினதும் குறைந்தபட்ச அடிப்படையிலான கூட்டானது வரவேற்கப்பட வேண்டியதாகும்.

முதலாளித்துவ பிரச்சார இயந்திரங்களினால் மூளைச்சலவைக்குள்ளாக்கப்பட்ட தமிழ் மக்கள் தப்பெண்ணங்களினால் சிறைவைக்கப்பட்ட நிலையில் நின்று இன்றுவரை முழுமையாக மீளவில்லை. இந்நிலையில் முதலாளித்துவப் பிரச்சார இயந்திரங்களின் கபடமான பொய்களை உடைத்தெறிந்து எமது மக்களுக்கு அரசியல் போதமளிப்பதை கடமையாகக்கொண்டு " சிந்தனை " வெளிவரும்.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று ஏற்கனவே ஏற்பட்டுள்ள ஐக்கியத்தை மேலும் வளர்த்தெடுக்கவும் பொது எதிரியை தோற்கடிக்கவல்ல பலமான அமைப்பை தோற்றுவிக்கவும் " சிந்தனை" முயற்சி செய்யும்.

சர்வதேச சோசலிச சக்திகளுக்கும் தமிழ் தேசிய விடுதலை இயக்கங்களுக்கும் பாலமாகவும் விளங்கவல்ல ஒரு மார்க்சிய ஏடாக " சிந்தனை "யை கொண்டுவர நாம் முயற்சிசெய்வோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜெயவர்த்தனு அரசாங்கத்தினதும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் பிரித்தாளும் சூழ்ச்சிகளுக்கு பலியாகிவரும் தமிழ், சிங்கள ஒடுக்கப் பட்ட மக்களுக்கு தெளிவையேற்படுத்த " சிந்தனை " பணியாற்றும்.

ஏகாதிபத்திய சூழ்ச்சிகளையும் சிங்கள, தமிழ் தரகு முதலா-ளித்துவ சக்திகளையும் முறியடிக்கவல்ல சர்வதேச தமிழர் அமைப்பு பொன்றை நிறுவுவதே சிந்தனையின் பணியாக அமையும். இதற்கமைய தமிழ் தேசிய விடுதலை இயக்கங்களுடன் புரிந்துணர்மையோடும் தோ-ழமையோடும் செயல்பட " சிந்தனை " முழு முயற்சியையும் மேற் - கொள்ளும்.

கடந்தகால புரட்சி, எதிர்ப்புரட்சி அனுபவங்களை அடிப்ப-டையாக வைத்து எதிர்காலத்து நிகழ்வுகளை செவ்வனே கணக்கிட்டு மக்கள் கையிலே புரட்சியை ஒப்படைத்து மக்கள் சோசலிச ஈழத்தை தத்துவ செழுமையால் நிறுவ வைப்பதற்கான ஊன்றுகோலாக "சிந்-தனை" அமையும்.



TELO, EPRLF, EROS. ஒற்றுமை வளரட்டும்

www.tamilarangam.net

# சுழிபுரம் கொலைகள்

வரலாற்றில் முன் எப்போதையும்விட மிகப்பெரிய அச்சுறுத்தலுக்குள்ளாகி தமிழினம் சேடம் இழுத்துக்கொண்டிருக்கிறது. ஜெயவர்த்தனாவின் பாசிச ஆட்சியில் இராணுவம் மூர்க்கத்தனமான வெறிபிடித்து ஆடிக்கொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் சொற்களால் விபரிக்க முடியாத அளவு பயமும் பீதியும் சூழ ஈழ மண்ணிலே நடமாடமுடியாத முடவர்களாகி விட்டனர். மிருகத்தனமான அடக்கு முறையில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்களது உயிர்கள் பறிக்கப்பட்டுவிட்டது. ஒடுக்குமுறையாளன் தனது அதிமட்ட சக்தியை பாவித்து இளைஞர்களை இராணுவ முகாம்களில் அங்குலம் அங்குலமாக சித்திரவதை செய்துகொண்டிருக்கிறான், யாழ்க்குடா நாட்டில் அரிசி, பருப்பு, தேங்காய், எரிபொருள் தட்டுப்பாட்டில் மக்கள் திண்டாடிக்கொண்டிருக்கின்றனர். 2500 தமிழ் மீனவர்கள் கடலில் இறங்கமுடியாதவாறு இராணுவச் சட்டம் யாழ்குடா நாட்டில் அமுலாகியுள்ளது. யாழ் பெரியாஸ்பத்திரியில் ஒட்சிசன் மருந்து, மயக்கமருந்து, தட்டுப்பாட்டின் காரணமாக நோயாளிகள் இறக்கத்தொடங்கியுள்ளனர்.

இவ்வாறான நிலையில், சேடம் இழுத்துக்கொண்டிருக்கும் தமிழினத்திற்கு " கஞ்சித்தண்ணி " ஊற்றவந்த தமிழ் தேசிய விடுதலை இயக்கங்கள் தமது துப்பாக்கிகளை பொது எதிரிக்கு எதிராகத் திருப்புவதைவிட வேகமாக தமக்குள்ளேயே திருப்பிக்கொண்டுள்ள விடயங்கள் மிகுந்த வேதனையளிக்கும் சம்பவங்களாகும். இவை இனியும் தொடரவேண்டுமா?.

விடுதலை இயக்கங்கள் தமக்கிடையிலான கருத்து வேறுபாடுகளை ஜனநாயக ரீதியில் பேச்சுவார்த்தை மூலமும், விமர்சன ரீதியாகவும் தீர்த்துக்கொள்ள வேண்டுமென " சிந்தனை " கேட்டுக்கொள்ளுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 13 தொழிற்சங்கங்களின் அறிக்கை

நாட்டு மக்கள் அனுபவித்து வந்த ஜனநாயக உரிமைகளை மறுத்த முதலாளித்துவ ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமானது, அவர்களது ஏகாதிபத்திய எஜமானர்களை திருப்திப்படுத்துவதற்காக தேசிய அமைப்புகளையும் கைத்தொழில் ஸ்தாபனங்களையும் உருக்குலைத்து தொழில்வாய்ப்பின்மையை அதிகரித்தும், வாழ்க்கைச் செலவை அதிகரிக்கச் " செய்தும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை சீரழித்துவிட்டது. வெகுஜனங்கள் தாம் விரும்பிய அரசாங்கத்தை தெரிவுசெய்யும் உரிமையை மோசடியான ஒரு " சர்வசன வாக்கெடுப்பு என்ற" தில்லு முல்லு மூலம் மறுத்துவிட்டது.

தமது அதிகாரம் நிலைத்து நிற்பது மக்களின் வெறுப்பை திசை திருப்புவதிலேயே தங்கியிருக்கிறது என்பதை அறிந்த அரசாங்கம் தேசிய இனப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்குப் பதிலாக வேண்டுமென்றே குளப்பி விட்டிருக்கின்றது என்பது மிகத்தெளிவாகின்றது. தமது இனவாதக் கொள்கைகளை உலகத்தின் கண்களிலிருந்து மறைப்பதற்காக சகல கட்சிகளின் மகாநாடு ஒன்றுக்கு ஏற்பாடு செய்து அதை ஸ்தம்பிதம் அடையும் -வரை இழுத்தடித்ததுடன் இந்த நாட்டின் தேசிய இனமான தமிழ் மக்களுக்கெதிராகக் ஒரு போரைப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இராணுவத்தினால் மக்களைக் கொல்வதின் மூலம் தேசிய இனப் பிரச்சினையை தீர்க்க முடியாது என்பதனை அரசாங்கமே உணர்ந்து விட்டது. இந்தச் சூழ்நிலையில் மக்களின் பெறுமதி மிக்க உயிர்களையும் நாட்டின் வளங்களையும் அழிக்கும் அரசாங்கத்தின் போர் வெறிகொண்ட நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு கேட்கிறோம்.

அடிப்படை மனித உரிமைகளையும் மீறி பிரயாணம் மற்றும் பிற வசதிகள் மீதிலான கட்டுப்பாடுகள் மூலம் வடக்கில் பொது வாழ்வு

www.tamilarangam.net

மிகுந்த ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இவ்வகையான நடவடிக்கைகளும் பல நாட்களுக்கு தொடரும் ஊரடங்குச் சட்டமும் குடிமக்களின் வாழ்க்கையைச் சீரழித்ததோடு அவர்கள் வீடுகளிலேயே சிறைவைக்கப் பட்ட நிலையில் இருந்தனர் என நாம் கருதுகிறோம். இந்த அரசாங்கம் வெளிப்படையாகவே சர்வதிகாரத்தை நோக்கிச் செல்லும் போக்குப் பற்றி தொழிலாள வர்க்கத்திற்கும் வெகுஜனங்களிற்கும் மீண்டும் மீண்டும் எச்சரிக்கை செய்திருக்கிறோம். இந்தப் பயங்கர நிலைமைக்கு வழிசமைத்த நடவடிக்கைகளை ஒவ்வொரு கட்டத்திலும் எதிர்த்திருக்கிறோம்.

அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்தை மீளப் பெற்றமை, எதிர்க் கட்சிகளின் கூட்டங்களைத் தாக்கியமை, பாராளுமன்ற அங்கத்தவர் தலைமையில் வந்த காடையர்களினால் தொழிலாளர் கொல்லப்பட்டமை, ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பது யூலையில் வேலை நிறுத்தம் செய்தோர் வேலை நீக்கம் செய்யப்பட்டமையும் அதில் 5000 பேர் இன்னும் வேலை கொடுக்கப்படாமையும், மீண்டும் வேலை கொடுக்கப்பட்ட தொழிலாளருக்கும் வஞ்சம் தீர்க்கும் முறையில் அளிக்கப்பட்ட தண்டனைகள், தொழிற்சங்க காரியாலயங்கள் ' சீல் ' வைத்து மூடப்பட்டமை, நீதியரசர்கள் காடையர்களைக்கொண்டு அவமதிக்கப்பட்டமை, சர்வகலாசாலை மாணவர்களைக் கொலை செய்தமை, விவசாயிகளின் எதிர்ப்பைக் குலைத்தது மட்டுமல்லாது அவர்களை அடித்து விரட்டியமை, புத்தி ஜீவிகளும் புத்த குருமாரும் வைத்த கூட்டத்தில் அத்துமீறிச் சென்று தாக்கியமை, கோவில்களைச் சூழ மறியல் போட இராணுவத்தை பிரயோகித்தமை, கள் இழுந்த நெசவாளர்களின் வாழ்க்கையைக் குலைக்க பொலிசாரைப் பாவித்து அவர்களைத் தாக்கியமை, நீதி மன்றங்களினால் குற்றவாளிகள் எனக் காணப்பட்ட பொலிசாருக்கு உத்தியோக உயர்வு அளித்தமை ஆகியன இந்த அரசாங்கத்தின் தொழிலாளர் விரோதமானதும், துரோகத்தன்மை உடையதுமான நடவடிக்கைகளாகும்.

ஒவ்வொரு தொழிலாளியினுடைய சம்பளத்திலிருந்தும் அவசர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கால சூழ்நிலையின் அடிப்படையில் ஒரு வீதம் 'மீளக்கட்டியெழுப்பும்' வரியாக 6 மாதத்திற்கு வசூலிக்கப்படும் வேளையில் பிரதம மந்திரி, மந்திரிமார், எதிர்க்கட்சித் தலைவர், பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஆகியோரின் சம்பளங்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்களினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. யூலை 1980 வேலை நிறுத்தத்தினால் வெகுவாகக் குறைக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படித்திட்டமானது தனியார்துறை தொழிலாளருக்கு முற்றாகக் கைவிடப்பட்டதுடன் அரசாங்க சேவையிலுள்ளோருக்கு ரூபா 100 மட்டும் என மாற்றப்படவுள்ளது.

இந்தவிதமான அவலட்சணமான ஒடுக்குமுறை நடவடிக்கைகளைத் தொடர்ந்து இனவாதமானது முடுக்கி விடப்பட்டு தமிழ் மக்கள் இராணுவ, பொலிஸ், இனவெறிக் காடையர்கள் மற்றும் சந்தர்ப்பவாதிகளினால் தொடர்ச்சியாக துன்புறுத்தப்படுகின்றனர். இந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் அவசர காலச் சட்டங்களினதும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தினதும் அதீத உபயோகத்தைக் கொண்டு அரசியல் இயக்கங்களைக் குலைக்கவும் இடதுசாரி இயக்கங்களையும் தொழிலாளர் ஸ்தாபனங்களையும் முடமாக்கவும் முயலுகின்றது.

1983 யூலையில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மனிதத்தன்மையற்ற இன ஒழிப்பு நடவடிக்கையின் பின் மூன்று இடதுசாரி கட்சிகள் குற்றம்சாட்டப்பட்டு தடைசெய்யப்பட்டன. மக்கள் விடுதலை முன்னணியின் மீதான தடை இன்னும் தொடர்கிறது. இடசாரிக் கட்சிகளை குற்றஞ்சாட்டி செய்யப்படும் பிரச்சாரங்களும், தொழிற்சங்கக் காரியாலயங்களில் நடாத்தப்படும் தேடுதல்களும் மக்கள் சிறைப்பிடிக்கப்படுவதும் தடுத்து வைக்கபடுவதும் அரசாங்கம், இடசாரி இயக்கங்களுக்கெதிராக ஒரு வேட்டைக்கு தயாராகிறது என்பதையே காட்டுகின்றது.

பொதுசன தொடர்பு சாதனங்கள் மூலம் இந்தியாவிலிருந்து ஒரு கற்பனையான ஆக்கிரமிப்பு ஏற்படப்படுவதாக்' கூறி, அதனால்

www.tamilarangam.net

வெகுஜனங்களை திசைதிருப்பச் செய்யும் பிரசாரமானது இந்த முழு நாட்டையுமே ஒரு ஆபத்தான குழப்பத்திற்கு இட்டுச்செல்லுமென நாம் எச்சரிக்கை செய்ய விரும்புகின்றோம். மக்கள் மனதில் வேண்டுமென்றே பயத்தையுண்டு பண்ணுவதும் மற்றும் போர் நடவடிக்கைகளும் போர் வெறிகொண்ட அமெரிக்காவையும் மற்றைய ஏகாதிபத்திய நாடுகளையும் எமது நாட்டிற்கு அழைக்க எடுக்கும் முயற்சிகளேயாகும்.

இந்தச் சூழ்நிலையில் அயல் நாடான இந்தியாவை ஆத்திரப்படுத்தும் பிரச்சாரங்கள் உடனடியாக நிறுத்தப்படுவதுடன் அந்த நாட்டுடனான நல்லுறவுகள் உடனடியாக மீள உருவாக்கப்படல் வேண்டும். தமது உரிமைகளுக்காக போராடுகின்றவர்களையும் மற்றும் ஏனைய தமிழ் அமைப்புகளையும் இன்றைய பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்கத்துடன் ஒரு பேச்சுவார்த்தைக்கு அழைத்தல் அவசியமாகும். இப்பேச்சு வார்த்தையின் நோக்கம் வடக்கு கிழக்கிலிருந்து இராணுவத்தை மீளப்பெறல், அரசியலமைப்பிலிருந்து 6வது திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்தல், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ரத்துச்செய்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமையவேண்டும்.

எல்லா அரசியல் ஸ்தாபனங்களையும், சகல தொழிற் சங்கங்களையும் மற்றும் மக்கள் அமைப்புகளையும் இந்தப் பிரச்சினைக்கு மேற்கூறிய அடிப்படையில் தீர்க்கும்படி அரசாங்கத்தை நிர்ப்பந்திக்குமாறு நாம் வேண்டுகின்றோம்.

(கையொப்பம்).

01. அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம்.
02. இலங்கை ஆசிரியர் சங்கம்.
03. சிறீலங்ககா ஜாதிக குரு சங்கமய.
04. கைத்தொழில், போக்குவரத்து மற்றும் பொது சேவையாளர் சங்கம்.
05. உள்ளூராட்சி தொழிற் சங்க சம்மேளனம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

06. ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம்.

07. காப்புறுதி தொழிலாளர் சங்கம்.

08. பெருந் தோட்டச் சேவையாளர் சங்கம்.

09. ஐக்கிய அரசாங்க தொழிலாளர் சம்மேளனம்.


10. தொழிலாளர் விவசாயிகள் விடுதலை முன்னணி.

11. லங்கா பொது சேவக சங்கமய.

12. ஐக்கிய தொழிலாளர் சங்கம்.

13. இலங்கை தொழிற் சங்க சம்மேளனம்.

90, சேர். சிற்றம்பலம் கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 2,
10. மார்கழி 1984.




இலங்கை அரசின் எதிர்புரட்சிக்கு இராணுவ தளபாடங்களை ஏற்றிவந்து எரிபொருள் பற்றாக்குறையினால் திருவனந்தபுரத்தில் இறங்கி சர்ச்சைக்குள்ளான ZAIRE CARGO விமானம். இது பின்னர் ராஜீவ் காந்தியின் தலையீட்டினால் கொழும்பு செல்ல அனுமதிக்கப்பட்டதாம்!

www.tamilarangam.net

# தமிழீழப் போராளிகளின் சரித்திரக் கடமை

இலங்கை வாழ் தமிழ் மக்கள் மீது சிறீ லங்கா முதலாளித்துவ அரசின் ஒடுக்கு முறையானது உச்சக்கட்டத்தை அடைந்து கொண்டிருக்கின்றது. இந்த ஒடுக்குமுறைகளுக்கு எதிரான உணர்வுகளில் அரசியல் ரீதியான வெளிப்பாடே தமிழீழ விடுதலைக்கான போராட்டமாகும். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திடமிருந்து அரச ஆதிக்கத்தையும் பெருந்தோட்ட பொருளாதாரத்தையும் போலி அரசியல் சுதந்திரமென்ற போர்வையில் பெற்றுக்கொண்ட சிங்கள ஆளும் வர்க்கமும் தமது வர்க்க சலுகைகளுக்காக சிங்கள ஆளும் வர்க்கத்திற்கு முண்டுகொடுத்துக்கொண்டிருந்த தமிழ், முஸ்லீம் ஆளும் வர்க்கங்களும் சீரழிந்துவரும் உலகப் பொருளாதார அமைப்பில் தமது வர்க்க இலாபங்களைப் பாதுகாத்துக் கொ கொள்வதற்கும் அரச ஆதிக்கத்தை நீடிப்பதற்கும் பின்வரும் முறைகளைக் கண்டுபிடித்தன.

இலங்கையின் அதிமுக்கியமான தேசிய வருமானத்தை தமது உடல் உழைப்பினால் தேடிக்கொண்டிருக்கும் மலையகத் தமிழ் மக்களை பொருளாதார ரீதியில் மிகக்கொடூரமாகச் சுரண்டியும் அவர்களது பிரஜா உரிமையை பறித்தும் அரசியல் அனாதைகளாக்கி அவர்களுக்கெதிராக இனவெறியைத் தூண்டி வன்செயல்களினாலும் பொலிஸ் மற்றும் அதிகார அடக்கு முறைகளினாலும் அவர்களை நிரந்தர அடிமைகளாக்கியது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை தமது பாரம்பரிய பூமியாகக்கொண்ட தமிழ்த் தேசிய இனத்தை அநீதியான சட்டங்களினாலும் திட்டமிட்ட குடியேற்றங்களினாலும், பொலிஸ் இராணுவ ஒடுக்குமுறைகளினாலும் இனத்துவேச வெறியாட்டங்களினாலும் அடக்கி, அரசியல் அதிகாரத்தை தமது கையில் தங்கவைத்துக் கொண்டுள்ளது.

**சிங்கள தொழிலாள வர்க்கத்திற்கு இனவெறியூட்டல்.**

சாதாரண சிங்களத் தொழிலாள விவசாய மக்களுக்கு இனவெறியூட்டி அவர்களைத் தமிழ் மக்களின் நியாயமான உரிமைப் போராட்-

www.tamilarangam.net

டத்திற்கும், மற்றைய சிறுபான்மை இனங்களுக்கும் எதிராகத் திசை திருப்புவதுடன் அவர்களின்ஜனநாயக உரிமைப் போராட்டங்களை அடக்கு முறைச் சட்டங்கள், காடையர்கள், பொலிஸ் இராணுவம் ஆகியவற்றைக்கொண்டு அடக்குகின்றது.

தமது வர்க்க நலன்களைப் பேணுவதற்காகவும், அதற்கு வேண்டிய வெளிநாட்டு கடனுதவிகளைப் பெறுவதற்காகவும் ஏகாதிபத்திய நாடுகளின் தரகர்களாக இலங்கையின் ஆளும் வர்க்கம் செயற்படுகின்றது. சர்வதேச கொம்பனிகள் குறைந்தகூலியில் மக்களைச் சுரண்டுவதற்கும், திறந்த பொருளாதாரமென்ற போர்வையில் ஏகாதிபத்திய நாடுகளின் கழிவுப் பொருட்களுக்கு இலங்கையைத் திறந்த சந்தையாக்கியும், இந்து சமுத்திரத்தின் மத்தியில் ஏகாதிபத்திய நாடுகள் கடற்படை - இராணுவ தளங்களை அமைப்பதற்கு நாட்டை அடகுவைக்க முயல்கின்றன.

தமிழ்மக்கள் நில பிரபுத்துவ முறை, சாதியமைப்பு, பெண் ஒடுக்குமுறை ஆகியவை நிலவும் நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பிலிருந்து விடுபட்டு ஒரு சுபீட்சமான சமுதாயத்தை அமைப்பதற்கு, நிலபிரபுத்துவத்திலிருந்து தோன்றிய தமிழ் முதலாளித்துவ தலைமைகள் கடந்த காலங்களில் வழிகாட்டத் தவறிவிட்டன. இந்தத் தலைமைகள் தமது வர்க்க நலன்களைப் பாதுகாப்பதற்கு சிங்கள முதலாளித்துவத்துடன் ஒட்டிஉறவாடி மக்களைச் சுரண்டுவதிலேயே ஈடுபட்டன. தேசிய இலாபத்தைப் பெறும் போட்டியில் சிங்கள முதலாளித்துவம் தமிழ் முதலாளித்துவத்தை இடித்து தள்ளவேண்டியேற்பட்டது. இதற்காகவும், மக்களை அவர்களின் பிரச்சினைகளிலிருந்து திசைதிருப்பவும் இனவெறி அரசியலைப் பயன்படுத்தியது. தமது தலைமைப் பதவிகளைக் காப்பற்றவேண்டிய தமிழ்த் தலைமைகள் 50க்கு 50, சம அந்தஸ்து, சமஉஷ்டி அரசு எனக் கோசங்களைக் காலத்திற்கேற்ப மாற்றி மாற்றி தமது பதவிகளைக் காப்பாற்றிக் கொண்டன.

<u>எதிர்ப்பு - ஒப்பந்தம் - எதிர்ப்பு.</u>

இந்தத் தலைமைகள் தமது கோரிக்கைகளில் எதையாவது பெற

www.tamilarangam.net

வதற்கு தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறினர். அவர்களது நடவடிக்கைகள் எல்லாம் பாராளுமன்ற வட்டத்திற்குள்ளேயே நடைபெற்றன. இந்தச் சரித்திரம் எதிர்ப்பு - ஒப்பந்தம் - எதிர்ப்பு என்ற வட்டத்திலேயே சுழன்றது.

நவகாலனித்துவ ஆதிக்கத்தில் உள்ள ஒரு அபிவிருத்தியடையாத நாட்டில் தனது வர்க்க நலன்களை ஸ்திரப்படுத்த முயன்றுகொண்டிருந்த சிங்கள முதலாளித்துவத்தினால் எந்தவொரு ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியவில்லை. அதேவேளையில் தமது வர்க்க நலன்களுக்காக அரச சலுகைகளை வேண்டி நின்ற தமிழ் முதலாளித்துவ தலைமைகள் எந்தவிதமான எதிர் போராட்டங்களை அரசுக்கெதிராக தொடர்ந்து நடத்த முடியவில்லை. தமிழ் முதலாளித்துவ தலைமைகளின் இந்த உள் முரண்பாடு அவர்களைத் தமிழ்மக்களின் உரிமைப் போராட்டங்களுக்கு தலைமைதாங்கத் தகுதியற்றவர்களாக்கி விட்டது.

அரசின் தமிழ் மக்களுக்கெதிரான தொடர்ச்சியான நடவடிக்கைகளினால் அரசிடமிருந்து எந்தவிதமான உரித்தான உரிமைகளையும் பெற்றுக்கொள்ளாத மாணவ, இளைஞர் சமுதாயத்தில் தமிழ் முதலாளித்துவ தலைமைகளின் மத்தியில் காணப்பட்ட உள் முரண்பாடுகள் தோன்றாது இருந்ததினால் அவர்கள் அரசிற்கெதிரான நேரடியான மோதல்களில் ஈடுபட ஆரம்பித்தனர். இளைஞர்களின் உணர்ச்சிக்குமுறல்களுக்கேற்ப தமிழ்த் தலைமைகள் தமது அரசியல் கோசத்தை தனிநாட்டுக் கோசமாக மாற்றிக்கொண்டன. தனிநாட்டுக் கோசத்தில் எவ்வளவு நேரம் சிரத்தை கொண்டிருந்தனர் என்பதை தமிழர் விடுதலைக் கூட்டணியின் 1977ம் ஆண்டுத் தேர்தல் விஞ்ஞாபனமே எடுத்துக்காட்டியது.

அமையப்போகும் தமிழ் ஈழம் எப்படியிருக்குமென்று வர்ணித்தார்கள். ஆனால் அதை எப்படி அடையமுடியுமென்ற வழிமுறைகளைக் கூறவில்லை. தமிழ்த் தலைமைகளின் சித்தாந்தங்களை ஏற்றுக்கொண்ட இளைஞர்கள் அத் தலைமைகளின் மந்தப்போக்கினால் விரக்தியடைந்தனர். இருந்தும் அத் தலைமைகளுக்குப் பங்கம் வராத முறைகளில் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்

www.tamilarangam.net

தனர். தனிமனிதர் மீதான ஆயுதப் பிரயோகங்களாக ஆரம்பித்த இத் தாக்குதல்கள் படிப்படியாக " நகர்ப்புற கொரிலா தாக்குதல்களாக" பரிணாம வளர்ச்சியடைந்தன. அதேசமயத்தில் அரசில் ஒடுக்கு முறைகளும், வடக்கு கிழக்கு இராணுவக் குவிப்பும், அரச பயங்கரவாதமும் தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

அரச கூலிப்படைகளுக்கெதிரான தாக்குதல்களும் அதற்கெதிராக இராணுவத்தினர் பொதுமக்கள் மீது வஞ்சம் தீர்ப்பதும், காடையர்கள் அரச ஆதரவுடன் இனக்கொலை வெறியாட்டங்களை நடாத்துவதிலும் இன்றைய தமிழ்மக்களின் யதார்த்த நிலையாக அமைந்துள்ளது.

முதலாளித்துவ தலைமைகளின் கீழ் நடைபெற்ற பாராளுமன்ற அரசியற் காலங்களில் வெகுசனங்கள் ஐந்து வருடத்திற்கொருமுறை வாக்குச் சாவடியில் புள்ளடி போடுவதைத் தவிர எந்தவித அரசியல் போராட்டக் களத்திலிருந்தும் ஒதுக்கப்பட்டே இருந்தனர். மக்கள் பங்களிப்பற்ற ஆயுதத் தாக்குதல்களிலும், கதவடைப்புக்களிலும், அதைத் தொடரும் அரசஊரடங்குச் சட்டங்களிலும் போராட்டக் களங்களிலிருந்து வெகுசனங்கள் தனிமைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்படுகின்றனர்.

பல்வேறு சித்தாந்தங்களின் அடிப்படையிலும், யுத்ததந்திர முறையிலும் செயல்படும் இயக்கங்களின் செயற்பாடுகளின் விளைவுகளுக்கு முகங்கொடுப்பவர்கள் சாதாரணத் தமிழ் மக்களேயாகும். ஆகையினால் இன்றுள்ள யதார்த்தமான நிலையில் தமிழ்மக்கள் விடுதலைப் போராட்டமானது தமிழ்மக்களை அரச பயங்கரவாதத்திலிருந்து பாதுகாத்தல் என்ற அடிப்படையிலேயே செயல்படுத்தப்படவேண்டும். தமிழ்மக்களை அரச பயங்கரவாதத்திலிருந்து காப்பற்றக்கூடிய இயக்கங்களிலேயே மக்கள் நம்பிக்கை வைப்பதுடன் அவ்வாறன இயக்கங்களுடன் இணைந்து தொடர்ச்சியான மக்கள் போராட்டத்திற்கும் தயார் ஆவார்கள். மக்களைப் பாதுகாக்கக்கூடிய செயல்திட்டத்தைக் கொண்டவர்களாலேயே மண்ணைப் பாதுகாக்கவும் முடியும். அரச கூலிப்படைகளை தமிழ் மக்களின் பாரம்பரிய பூமியிலிருந்து அகற்றவும் முடியும்.

www.tamilarangam.net

இன்றைய தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் உண்மையான எதிரிகள் யார் என்பதை நாம் இனங்கண்டுகொள்ள வேண்டியது அவசியமாகும். நமது எதிரி சிறீலங்கா முதலாளித்துவ அரசும் அதற்குப் பக்கபலமாக இருக்கும் ஏகாதிபத்திய சக்திகளுமேயாகும். எமது போராட்டமானது கூலிப்படைகளை " தமிழ் மண்ணில் அழித்தல்" என்ற அடிப்படையில் மட்டும் அமையுமானால் அது ஈழப் போராட்டத்தின் தன்மையினை முழுமையாக நோக்காமையையே காட்டுகின்றது.

இலங்கையின் மேற்கு மாகாணத்தில் தனது ஆணிவேரை வைத்திருக்கும் சிறீலங்கா அரச இயந்திரமே எம்மை ஒடுக்குகின்றது என்ற உண்மையை நாம் புரிந்துகொள்ளவேண்டும். அந்த ஆணிவேரையாட்டி அரச இயந்திரத்தை நிலைகுலையச் செய்யும் செயற்பாட்டுடனேயே ஈழ விடுதலை இயக்கங்கள் செயற்படவேண்டியது அவசியமாகும். எந்தவொரு பிரச்சினையையும் முழுமையாக நோக்காமல் ஒரு பகுதியை மட்டும் நோக்குவதினால் அந்தப் பிரச்சினைக்கு ஒரு முழுமையான தீர்வைக் காணமுடியாது.

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டமானது இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவிருக்கும் மலையக மக்களின் உரிமைப் போராட்டங்களையும் சிங்களத் தொழிலாள-விவசாய மக்களுக்கும் அரசிற்கும் இடையிலான முரண்பாடுகளை உச்ச-நிலையை அடையச்செய்யும். அவ்வாறான உரிமைப் போராட்டங்களை முன்னெடுத்துச்செல்ல உதவியாக இருப்பதும், முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்தி அக்கிவிப்பதும் ஈழப் போராளிகளின் போராட்ட தந்திரத்தின் ஓர் அங்கமாக அமையவேண்டும். இவ்வாறான மும்முனைத் தாக்குதல்களே சிறீலங்கா அரசைநலிவடைந்து வீழ்ச்சியடையச் செய்யும்.

ஏகாதிபத்திய நவகாலனித்துவ சுரண்டலுக்கு உடந்தையாகவே சிறீலங்கா அரசு இயங்கிவருவதால் இந்த அரசுக்கெதிரான போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டமாகவே இறுதிவரை உரு-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெடுக்குமென்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. இந்தக் காரணத்தினால் சர்வதேச ஏகாதிபத்திய விரோத சக்திகளுடன் நாம் தோழமை கொள்வது மட்டுமல்லாது அவர்களின் ஆதரவையும் பெறவேண்டியது அவசியமாகும்.

இன்று தமிழ் ஈழ விடுதலையில் அக்கறைகொண்ட சகல முற்போக்கான இயங்கங்களின் ஒற்றுமையான போராட்ட முன்னணியினாலேயே இவ்வாறான ஒரு செயற் திட்டத்தை நடமுறைப்படுத்த முடியுமென நாம் நம்புகிறோம். அவ்வாறான ஒரு போராட்ட முன்னணியை அமைப்பதே இந்த இயக்கங்களின் இன்றைய சரித்திரக் கடமையாகும்.

## முதற்சந்திப்பு



அண்மையில் இந்தியாவிற்கு விஜயம் செய்த தேசிய பாதுகாப்பு அமைச்சரிடம் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, தான் இலங்கை ஜனாதிபதியை சந்திக்க ஆவல் கொண்டுள்ளதாய் தெரிவித்தார்.

www.tamilarangam.net

# தலைமை ஆபத்து

அரசின் திட்டமிட்ட பயங்கரவாதத்திற்கு எதிராக மலையகத் தமிழ் மக்கள் மத்தியில் புதிய தலைமைகள் உருவாகின்றன என்ற உண்மையும் அதனால் தற்போதைய முதலாளித்துவ தலைமைகளுக்கு நெருக்குவாரம் ஏற்பட்டுள்ளமையும் இலங்கைத் தொழிலாள காங்கிரசின் தலைவர் திரு. தொண்டமானும் செயலாளர் செல்லச்சாமியும் ஜனாதிபதி ஜயவர்த்தனவுக்கு சமீபத்தில் எழுதியுள்ள கடிதங்கள் மூலம் தெளிவாகியுள்ளன.

டிசம்பர் 15, 24ம் திகதிகளில் திரு.செல்லச்சாமி எழுதிய கடிதங்களில், அரச படைகளும், காடையர் கூட்டங்களும் மலையகத் தமிழ் மக்களுக்கு எதிராக நடாத்திய பயங்கரவாதச் செயல்களைத் திகதிவாரியாக விபரித்து அவற்றை திட்மிட்ட இன ஒழிப்பு நடவடிக்கைகளேயென சாடியுள்ளார்.

டிசம்பர் 24ம் திகதியில் திரு.தொண்டமான் எழுதியுள்ள கடிதத்தில், காணி, காணி அபிவிருத்தி மந்திரியின் திட்டமிட்ட இனவாதக் கொள்கைகளை விபரித்து இருப்பதுடன் தனது தலைமைக்கு ஏற்படவிருக்கும் ஆபத்தைப் பற்றியும் சிறீலங்கா முதலாளித்துவ தலைவரிடம் பின்வருமாறு முறையிட்டுள்ளார்.

" பல்வேறு அமைச்சுக்கள் மற்றைய அமைச்சர்களுடன் கலந்து ஆலோசிக்காமல் கடைப்பிடிக்கும் இவ்வாறான ' கொள்கைகள் ' கடந்த 45 வருட காலமாக நான் இந்திய வம்சா வழியினர் மத்தியில் கட்டியெழுப்பிய செல்வாக்கையும் அதிகாரத்தையும் பலவீனமடையச் செய்கின்றன என்ற உண்மையை மேன்மைதங்கிய தாங்கள் உணரவேண்டும். — இந்தச் செல்வாக்கிலும் அதிகாரத்திலும் தாங்களும் ஐக்கிய தேசியக் கட்சியும் பெருமளவில் தங்கியிருந்திருக்கின்றீர்கள். பெருந்தோட்டப் பகுதிகளில் கல்வியறிவு பெற்ற வேலையற்றிருக்கும் மக்கள் வேறு ஆபத்தான திசைகளில் இட்டுச் செல்லப்படுகின்றனர். இன்றைய நிலைமையானது கட்டுப்பாட்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டிற்குள் கொண்டுவரப்படாவிட்டால் பெருந்தோட்டப் பகுதிகளில் அதனால் ஏற்படும் பின் விளைவுகள் அதிக பயங்கரமானவையாக இருக்கும்!!

தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் காலம்காலமாக வேரூன்றியிருந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் முதலாளித்துவத் தொழிற் சங்கத் தலைமையானது தனது வர்க்க நலன்களைப் பேணுவதற்காக முதலாளித்துவ ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்ததுமல்லாது அமைச்சர் அவையிலும் பங்கேற்றுக் கொண்டது.

1977 ஆகஸ்ட் முதல் தொடர்ந்து வந்த அரச பயங்கரவாத நடவடிக்கைகளில் பங்கேற்று வந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைமையானது தமிழ் தேசிய இனப் போராட்டத்தை நசுக்க துணை போனதோடல்லாமல் மலையக மக்களின் தேசிய மற்றும் வர்க்கப் போராட்ட உணர்வுகளைச் சின்னாபின்னப் படுத்தியது.

இவ்வாறான நெருக்கடிமிக்க காலகட்டத்தில் இலங்கைத் தொழிலாள காங்கிரசின் முதலாளித்துவ தலைமுறையானது மலையக மக்கள் மத்தியிலிருந்து எந்நேரமும் தூக்கியெறியப் படலாமென்ற அச்சம் இயல்பாகவே ஏற்பட்டதின் விளைவாக காலம் கடந்த நிலையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமானும் செயலாளர் செல்லச்சாமியும் எழுதியுள்ள கடிதங்களில் ஒரு பகுதியையே மேலே தந்துள்ளோம்.


**T.E.L.O ஒளியின் ஆரம்பம்**

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (T.E.L.O) பத்திரிகைகளுக்கும் மற்றைய தகவல்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

V. MAHADEVA.
TUBINGER STR. 81.
7000 STUTTGART. 1
WEST GERMANY.

TEL;0711/6498518

www.tamilarangam.net

# தமிழ் மக்களுக்கென பாட்டாளி வர்க்கக் கட்சி

[மேற்படி கட்டுரை 1.12.1983 ஜேர்மனியில் வெளியாகிய 'எண்ணம்' பத்திரிகையில் வெளிவந்தது. இக்கட்டுரை சிந்தனையைத் தூண்டுவதாக இருப்பதன் காரணமாக இவ்விடயம்பற்றி மேலும் கருத்துப் பரிமாறல்களை ஏற்படுத்தும்பொருட்டு 'சிந்தனை' இக்கட்டுரையை வெளியிடுகின்றது. இக்கட்டுரையையொட்டி வாசகர்களிடமிருந்து கருத்துக்கள், கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. நன்றி! 'எண்ணம்']

முழு மனித சமுதாயத்திற்கான பண்டங்கள் அனைத்தையும் உற்பத்தி செய்யும் தொழிலாள வர்க்கம் மற்றைய எல்லா வர்க்கங்களையும்விட சக்தி மிக்கதாக தோன்றுவதற்குக் காரணம் உற்பத்தியோடு அது வைத்திருக்கும் உறவுதான். உற்பத்திச் சாதனங்களை நிர்வகிக்கும் தன்மையும் அதற்காக செலவிடும் சக்தியும் தொழிலாள வர்க்கத்திடமிருந்தே எடுக்கப்படுகின்றது. தொழிலாளியானவன் முதலாளியால் ஒரு உற்பத்திக் கருவியாகவே பாவிக்கப்படுகிறான். சுருங்கச் சொன்னால் தொழிலாளி ஒரு பேசும் கருவியே.

இந்தப் பின்தங்கிய நிலைக்கு முதலாளித்துவ வர்க்கத்தால் தள்ளப்பட்டுள்ள தொழிலாளி வர்க்கம் எல்லா வழிகளிலும் முதலாளித்துவ வர்க்கத்தால் சுரண்டப்பட்டு இன்று உயிர் வாழ்வதற்காககூட உழைக்கும் கட்டத்தையும் விட்டு அதையும் மீறிச்சென்றுவிட்டது.

முதலாளித்துவத்தின் மனித நேயமற்ற உற்பத்திமுறை இன்றைய காலகட்டத்தில் எத்தனையோ மில்லியன் கணக்கான மக்களை படுபஞ்சத்திற்கு தள்ளிவிட்டுள்ளது. இவ்வுற்பத்தி முறை அழிக்கப்பட்டு முழு மனித நேயம் கருதி உற்பத்தி செய்யும் உற்பத்திமுறை கொண்டுவரப்படல் வேண்டும். இன்றை சகாப்தமானது இரண்டு பெரும் பகையான வர்க்கங்களைத் தோற்றுவித்துள்ளது. அதாவது இன்றைய நெருக்கடி சூழ்ந்த காலகட்டமானது சுரண்டும் சிறுபான்மை முதலாளித்துவ வர்க்கத்திற்கும், சுரண்டப்படும் பெரும்பான்மை தொழிலாள வர்க்கத்திற்கும் இடையிலான தீராப்

www.tamilarangam.net

பகைமையை தோற்றுவித்து வளர்த்துள்ளது. இனி எந்தவகையான இணக்கமும் காணமுடியாது என்பதன் விளைவாகவே ஆளும் முதலாளி வர்க்கம் ஆளப்படும் தொழிலாளி வர்க்கத்தை ஒடுக்குகின்றது. மார்க்சின் கருத்துப்படி அடக்குமுறைக்கெதிராக கிளர்ந்தெழும் தொழிலாள வர்க்கத்தை ஒடுக்குவதற்கான ஓர் விசேட உறுப்பாக பரிணாமம் அடைந்ததே அரசு இயந்திரம்.

பல சகாப்த வரலாறுகளையும் அதனால் எழும் சமூகக் கட்டமைப்புகளையும் ஆராய்ந்த மார்க்ஸ் 'எவ்வரலாற்று அடிப்படையிலும் எச் சகாப்தத்திலும் சரி பாட்டாளி வர்க்கம் ஆளும் வர்க்கத்தினால் சுரண்டப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வந்துள்ளது. இன்றைய முதலாளித்து வர்க்க சகாப்தத்தில் அதீத சுரண்டலும் ஒடுக்கு முறையும் அசுரத்தன்மையாகிவிட்டதினால், இனி தொழிலாள வர்க்கம் முதலாளித்துவ வர்க்கத்தை அழித்தொழிக்காமல் ஒருபோதும் விடுதலையடைய மாட்டாது' என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

'ஆயுதமேந்திய ஆட்களைக்கொண்ட தனிவகைப் படைகளும், சிறைக்கூடங்களும் இன்னும் பிறவும் கொண்டு ஒடுக்கிவரும் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்திற்கு, தொழிலாள வர்க்கத்திற்கும் இடையில் இனிச்சமரசம் கிடையாது' என்பதே மார்க்ஸினதும் எங்கெல்சினதும் முடிவு. மார்க்சினது போதனைக்கு என்ன நேர்ந்து வருகின்றதோ அதுவேதான் விடுதலைக்காகப் போராடும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடைய புரட்சிகர சிந்தனையாளர்களுக்கும், தலைவர்களுமானோரின் போதனைகளுக்கும் வரலாற்றில் அடிக்கடி நேர்ந்துள்ளது. ஒடுக்கும் வர்க்கங்கள் மாபெரும் புரட்சியாளர்களை அவர்களுடைய வாழ்நாளில் ஓயாமல் வேட்டையாடின. அவர்களுடைய போதனையின் மீது கட்டுக்கடங்காத காழ்ப்பும், வெறித்தனமான வெறுப்பும் கொண்டு கயமையான பொய்ப் பிரச்சார அவதூறுகளை சுமத்தின. அவர்கள் இறந்தபிறகு அவர்களை அபாயமற்ற பூஜை அறைப் படங்களாக்கி வழிபாட்டுக்குரியோராக்கவும்,

www.tamilarangam.net

தூரளவு அவர்களுடைய பெயர்களை புனிதத் திருப்பெயர்களாக்கவும் முயற்சிகள் செய்யப்படுகின்றன.

ஒடுக்கப்பட்ட வர்க்கங்களை 'ஆன்மதிருப்தி' பெறச்செய்வதும், அவற்றை ஏமாற்றுவதும் அதேபோதில் புரட்சிப் போதனையிடமிருந்து அதன் சாரப்பொருளைக் களைந்து புரட்சி முனையை மழுங்கடித்து அதைக் கொச்சைப்படுத்துவதுதான் இந்த முயற்சிகளின் நோக்கம். முதலாளித்துவ வர்க்கத்தாரும் தொழிலாள இயக்கத்திலுள்ள சந்தர்ப்ப வாதிகளும் இன்று மார்க்சியத்தை இவ்வாறு பதனம் செய்வதில் ஒன்றுபடுகிறார்கள். இந்தப் போதனையின் புரட்சித் தன்மை அதன் புரட்சி ஆன்மாவை அவர்கள் விட்டொழிக்கவோ, மூடிமறைக்கவோ, திரித்துப் புரட்டவோ செய்கின்றார்கள். மார்க்சியத்தைத் திரித்துப் புரட்டுவது என்றுமில்லாத அளவிற்கு மலிந்திருக்கும் இப்படிப்பட்ட நிலைமையில் மெய்யாகவே மார்க்ஸ் சொன்ன 'முதலாளித்துவ வர்க்கத்திற்கும் தொழிலாள வர்க்கத்திற்குமிடையில் இனி இணக்கம் காண முடியாது' என்பதன் பொருள் குறித்து நாம் ஆணித்தரமான தொழிலாள வர்க்க நிலைப்பாட்டிற்கு வராமல் இருந்துவிடமுடியாது.

தமிழ் ஈழப் போராட்டத்தில் குதித்துள்ள நாம் கலப்படமற்ற தொழிலாளவர்க்க நிலைப்பாட்டை எடுத்தே தீரவேண்டும். ஆளும் முதலாளித்து வர்க்கம் ஒருபோதும் சொத்துடமைகளை பொதுவுடமையாக்காது, பதிலாக மூலதனக்காரரின் ஆதிக்கத்தையும் அவர்களின சுரண்டல்களையும் நியாயப்படுத்தி ஒடுக்குதலை தொழிலாக்கிகொள்ளும். இதேபோலத்தான் கலப்பட சோசலிஸ்டுகளும், குட்டி பூசுவாக்களும் சுரண்டல் அமைப்புகளையும் முதலாளித்துவத்தின் அதே சட்ட திட்டங்களையும் தூக்கியெறியத் தலைப்படாத பழைமை வாதிகளே. தொழிலாள வர்க்கத்திற்குச் சொந்தமான அதன் உழைப்பிலேயே உருவாகிய மூலதனம் அனைத்தும் தொழிலாளிக்குச் சொந்தமாக வேண்டும். மூலதனத்தை இடுபவர் முதலாளியாக இருப்பினும் அது காலாகாலமாக தொழிலாள

www.tamilarangam.net

வர்க்கத்திடமிருந்து உழுஞ்சிய பணக்குவியலே. அது எவ்வழியில் நோக்கி னும் தொழிலாள வர்க்கத்திற்குச் சொந்தமானதேதான்.

முதலாளித்துவ உற்பத்தி முறையில் உற்பத்திப் பங்கை வகிக்கும் வர்க்கம் தொழிலாள வர்க்கமேதான். காலாகாலமாக தொழிலாள வர்க்கத்தின் உழைப்பால் தோற்றுவிக்கப்பட்ட உற்பத்தி ஒன்று குவிப்பே முதலாளித்துவ வர்க்கம் தன்னுடையதென்று கூறும் இம் மூலதனம். முதலா-ளித்துவம் இம் மூலதனத்தை வெறும் இலாபம் கருதும் நோக்குடன் உற்-பத்திக்கு ஈடுபடுத்துவதால் முழு மனித தேவையையும் பூர்த்திசெய்யவில்-லை. ஆனல் மூலாதனம் தொழிலாளர் வர்கத்தின் பொதுவுடமையாகும்போது முழு மனித தேவை கருதியே உற்பத்தி செய்யும். இவ்வுற்பத்தி இலாப நோக்குக்காகச் செயல்ப்படுவதல்ல. இதன் பிரகாரமே மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும். ஆகவே தொழிலாள வர்க்கத்தின் கையில் உற்பத்திச் சாதனங்கள் மாற்றப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் உற்பத்தியின் பங்கை வகிப்பது தொழிலாள வர்க்கமே.

ஆகையால்த்தான் உற்பத்திக் கருவிகள் அனைத்தும் தொழிலாள வர்க்கத்தின் உரிமையாக்கப்படல் வேண்டும். தனியுடமை அனைத்தும் பொதுச் சொத்தாக்கப்படல் வேண்டும். இதைச் செய்யவல்லது கலப் படமற்ற பாட்டாளி 'வர்க்கத் தலைமையிலான கட்சியொன்றேதான். தமிழ் ஈழத்தில் இருக்கும் மூலதனம் அனைத்தும் பொதுவுடமை ஆக்கப்-பட முடியுமானல் தொழிலாள வர்க்கக் கட்சியொன்றை நிர்மாணித்தே தீரவேண்டும். வர்க்க சமரசவாதம் பேசும் கலப்பட சோசலிஸ்டு-களும், குட்டிப் பூசுவாக்களும் ஒருபோதும் இந்நிலைப்பாட்டிற்கு வர மாட்டார்கள். ' பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ வர்க்கத்தினை புரட்சிகரமாக வீழ்த்துவதற்காகப் போராடுகிறது. குட்டிப் பூர்சு-வாக்கள் ஏகாதிபத்தியத்தை சீர்திருத்தப் பாணியில் மேம் படுத்தவும் அதற்குத் தகவமைத்துக் கொள்ளவும் அதேபோதில் அதற்குக் கீழ் அடங்குவதற்கும் வேண்டிப் போராடுகிறது'. தமிழ் மக்களுக்கென்றொரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுபீகரமான சகாப்தம் மலர வேண்டுமாயின் அது குட்டிப் பூர்சுவாத்
தன்மை கொண்ட இயக்கங்களையும், கலப்பட சோஷலிசம் பேசும் திரி-
பு இயக்கங்களையும் தம்மத்தியில் இருந்து அகற்றித் தமக்கென ஒரு
பாட்டாளி வர்க்கக் கட்சியைப் படைக்கவேண்டும். பாட்டாளி வர்ககம்
தனக்கென்று ஒரு சுயாதீனமான கட்சியை உருவாக்காமல், ஆட்சிப்
பொறியமைப்பை நொருக்கிக் கைப்பற்றாமல் தனது சொந்த நோக்க-
த்தை நிறைவேற்ற முடியாது. அதாவது கலப்பட சோசலிஸ்டுகள், குட்டி
பூர்சுவாக்கள் மற்றும் இதர பிற்போக்கு வாதிகளின் கீழ்ப்படிவுக்கு உட்-
படாமல் சுயாதீனமான உறுதியான பாட்டாளி வர்க்கக் கட்சி ஒன்றால்
தான் பொதுவுடமைச் செயல்பாடுகள், திட்டங்களை நிறைவேற்ற முடி-
யும்.

வர்க்கங்களுக்கிடையில் இணக்கம் உண்டாக முடியாது என்பதன்
உண்மைப் பொருளின் பங்கது சாயாமல் 1917ம் ஆண்டு புரட்சியின்
போது எல்லா சோசலிஸ்ட் புரட்சியாளர்களும், மென்சவிக் கட்சியின-
ரும் வர்க்கங்களுக்கிடையே இணக்கம் உண்டாக்கலாம் என்ற குட்டி
முதலாளித்துவ தத்துவத்துடனே சரிந்து சென்றுவிட்டனர். அப்போது
கெரன்சி அரசாங்கம் குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளின் தலை
மையின் காரணமாய் — சோவியத்துக்கள் ஏற்கனவே ஆற்றல் பற்றுமளவும்
முதலாளித்துவ வர்க்கம் அவற்றைக் கலைக்க இன்னமும் பலம் பெறும-
வும் இருந்த தருணத்தில் புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தின் மீது அடக்
கு முறையை கட்டவிழ்த்து விட்டது. அதாவது சோசலிஸ்ட் புரட்சியா-
ளர்களையும், மென்சவிக்குகளையும் கொண்ட கரன்சி அரசாங்கம்
வர்க்க சமரசம் செய்யலாம் என்ற எண்ணம் கொண்டு சோசலிச
வேலைத் திட்டத்தை நிர்மாணிக்க முடியாது போய்விட்டார்கள்.

இதே போலத்தான் சோசலிசத்தைப் பதனம் செய்யும்
எந்தக் கட்சிகளும், கலப்பட சோசலிஸ்டுகளும் ஒருபோதும் தொழி
லாள வர்க்கத்தின் விடுதலையை வென்றுகொடுக்க மாட்டார்கள். ஆகை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யால்த்தான் தமிழ் மக்களுக்கு என்று ஓர் பாட்டாளி வர்க்கக் கட்சி-யொன்று நிர்மாணிக்கப்பட்டால் மாத்திரமேதான் பாட்டாளி வர்க்கம் தனது சொந்த நோக்கத்தை நிறைவேற்ற முடியும். மற்றைய கலப்பிட சோசலிஸ்டுகளுக்கு கீழ்ப்படியாமல் மற்றைய கட்சிகளை தனக்கு கீழ்ப் படியச் செய்ய வேண்டும்.

தொழிலாள வர்க்கத்திற்கும் முதலாளித்துவ வர்க்கத்திற்கும் இணக்கம் என்பது ஒருபோதும் இல்லையென்ற உண்மைப் பொருளின் காரணமாக சுயாதீனமான பாட்டாளி வர்க்கக் கட்சி வேண்டும். அது சர்-வதேச பாட்டாளி வர்க்கக் கட்சியாக அமைக்கப்பட வேண்டுமென்பதற்காகவே 1865ம் ஆண்டு 1ம் அகிலத்தை மார்க்ஸ் (சர்வதேச பாட்டாளி வர்க்கக் கட்சியை ) நிர்மாணித்தார். இதை முற்றுமுழுதாக ஏற்றுக் கொண்டு ஏங்கல்சினால் 1889ம் ஆண்டு இரண்டாம் அகிலம் நிறுவப்பட்-டது. ஏங்கல்சின் மறைவிக்குப் பின்னர் இரண்டாம் அகில பிரபல தலை-வர்களில் ஒருவரான கால்ஸ் கவுட்ஸ்கி வர்க்கங்களுக்கிடையே இணக்கம் காண-முடியுமென்ற தப்பெண்ணங்களில் ஒட்டிக்கொண்டு இரண்டாம் அகிலத்தை சீர்குலைத்ததோடு இரண்டாம் அகிலத்தை ஆட்டிப் படைக்கும் மிகப்பெ-ரிய கட்சியாக விளங்கிய ஜேர்மன் எஸ்.பி.டி யையும் பழபிற்போக்கான பாதைக்கு இழுத்துச் சென்றார். அன்று ஏராளமான சந்தர்ப்ப வாதிகள் தொழிலாள வர்க்கத்திற்கும், முதலாளித்துவ வர்க்கத்திற்கும் இணக்கம் உண்டாக முடியுமென்ற மார்க்சியத்திற்கு முற்றிலும் புறம்பான கருத்தை ஊசலாட வைத்தமையே அன்றைய விஸ்பரூபமடைந்த பொருளாதார நெருக்கடிக்காலக் கட்டத்தில் உலகத் தொழிலாள வர்கக்கம் ஆட்சி-யைக் கைப்பற்றாமல் போனது. வல்லரசுகளின் நாடுபிடிக்கும் போட்-டா போட்டி 1914 - 1917 ஏகாதிபத்திய யுத்தத்தை மூண்டெழச் செய்வதற்குக் காரணம் இச்சந்தர்ப்ப வாதிகள் கொண்டிருந்த 'வர்க்கங்களிடையே இணக்கம் ' உண்டாக்கலாமென்ற பழு பிற்போக்கான கொள்கையே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என் இலங்கையில் தொழிலாள வர்க்கத்திற்காக போராடத் தலைப்பட்ட கம்யூனிஸ்டுகளான மொஸ்கோ சார்புக் கம்யூனிஸ்டு கட்சியும் சமசமாஜக் கட்சியும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஆட்சி நடாத்தின. முதலாளித்துவ சிறீலங்கா அரசாங்கத்துடன் ஆட்சி நடாத்தி முதலாளித்துவ வாதிகள் மேலும் நசுக்கப்பட்டார்களே ஒழிய வேறொன்றுமல்ல. என்.எம்.பெரேராவும், பீற்றர்கெனமனும் சிறிமாவோ பண்டாரநாயக்காவை (ஆளும் முதலாளித்துவத்தை) மாற்றி விடலாமென்று தப்புக்கணக்குப் போட்டார்கள். ஆளும் முதலாளித்துவம் ஒருபோதும் மனம் மாறாது. பதிலுக்குத் தொழிலாள வர்க்கத்தின் பாலுள்ளவர்களைத்தான் மாற்றும். எப்பொழுதும் விழிப்புணர்ச்சியுடையதும், புத்திசாதுரியமானதுமான முதலாளித்துவ வர்க்கம் தானாகவே மாற்றமடையப் போவதில்லை. மாற்றவும் முடியாது என்பதே வரலாறு புகற்றும் பாடமும் மார்க்சிசியமாகும்.

முதலாளித்துவத்தை தூக்கியெறிந்து அந்த அரசுப் பொறியமைப்பை நொருக்கி, தொழிலாள வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றினலொழிய சோசலிச வேலைத் திட்டத்தை செய்ய முடியாது. தமிழ் ஈழப் போராட்டத்தில் குதித்துள்ள நாம் கெட்டியான சுயாதினமான பாட்டாளி வர்க்கக் கட்சியை உருவாக்கி, பூர்சுவாக்களுடன் சமரசம் செய்யாமல் தொழிலாள வர்க்கமாகிய நாம் தனித்து நின்று போராட வேண்டும். நடுத்தர வர்க்க மனோபாவமுள்ள குட்டி பூர்சுவாக்களின் பெரும் பகுதி பாட்டாளி வர்க்கத்தின் பக்கமே தள்ளப்படுவார்கள். அவர்களை பாட்டாளி வர்க்கத் தலைமையின் கீழ் அணிதிரட்ட வேண்டும். எமது போராட்டத்தின் போது எமது வர்க்கத்தியுள்ள இந்திய உப-கண்ட தொழிலாள வர்க்கத்தினதும், உலகத் தொழிலாளர் வர்க்கத்தினதும் ஆதரவையும் ஆன்மீகப் பிணைப்பையும் ஏற்படுத்த வேண்டும். இதுவே எமது விடுதலையை வென்றெடுப்பதற்கான சரியான வழியாகும்.

www.tamilarangam.net

1917ம் ஆண்டு ஒக்டோபர் புரட்சியின் போது இங்கிலாந்திலிருந்தும் பிரான்ஸிலிருந்தும் வரவிருந்த ஆயுதங்களை கப்பல் துறைமுகத் தொழிலாளர்களும், புகையிரதத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்து தடுத்து விட்டனர். இதனாலேயேதான் ரஷியப் புரட்சி வெற்றிபெற்றது. விடுதலையடைந்த நிக்கரகுவாவை அப்புரட்சியைத் தோற்றடிப்பதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் கொண்டுராசில் படைகளைக் குவிப்பதுமாய் நாலா கரையும் யுத்தக் கப்பலை நிலைகொண்டிருக்கிறது. இவ்வளவு பேராபத்தின் மத்தியில் நிக்கரகுவா அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடுகின்றது என்றால் அன்டை நாட்டுத் தொழிலாள வர்க்கத்தினதும் இதர நாட்டுத் தொழிலாள வர்க்கத்தினதும் ஊசலாட்டமற்ற ஆதரவேதான்.

ஆகவேதான் தமிழ் மக்களுக்கென்று ஓர் பாட்டாளி வர்க்கக் கட்சி நிர்மாணிக்கப்பட்டு அது உலகத் தொழிலாள வர்க்கத்தின் ஆதரவோடு ஆத்மீகப் பிணைப்போடு ஒன்றியமாக வேண்டும். இதுவே தமிழ்த் தொழிலாள வர்க்கத்தின் கடமையாகும்.

# விஜயாவின் எதிர்நீச்சல்

சிறீலங்கா மக்கள் கட்சி (SLMP) யைச் சார்ந்த விஜய-குமாரதுங்க கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஆற்றிய உரையில் சில பகுதிகளை கீழே தருகின்றோம்.

" அவர்கள் (அரசாங்கம்) இன்று ஒரு போர் நடைபெறுவ-தாகக் கூறுகின்றார்கள். ஆனால் இது யாருடைய போர்? யாருக்கு எதி-ராக இந்தப் போர் நடைபெறுகின்றது? ' பயங்கரவாதிகள் '

www.tamilarangam.net

என்று சொல்லப்படுகின்றவர்கள் எத்தனையோ பேர் கொல்லப்பட்டார்கள் என்பதை தேங்காய் அளவு எழுத்துக்களில் பிரசுரிக்கின்றார்கள். ஆனால் தேங்காய் விலைகள் உயர்வதையோ 'ஈ' அளவு எழுத்துக்களில் எழுதுகின்றார்கள். ஒரு ஐக்கிய தேசியக் கட்சி பிரமுகர் இந்த நாட்டை மண்வெட்டிகள் அரிவாள்கள் கொண்டு பாதுகாக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் நாட்டைப் பாதுகாக்க வேண்டுகிறாரா? அல்லது இந்த ஊழல் அரசாங்கத்தில் கொள்ளைப் பொருட்களைப் பாதுகாக்க வேண்டுகின்றாரா? இன்றைய உண்மையான பகைவன் அரசாங்க பயங்கரவாதமே. இன்றைய உண்மையான போராட்டம் உழைப்பாளிகளுக்கும் முதலாளிகளுக்குமே" என்று கூறிய அவர் மேலும் புத்த குருமார்கள் பற்றி குறிப்பிடுகையில் "எல்லா உயிர்களும் சந்தோசமாக வாழவேண்டுமென்று அவர்கள் கூறும் பொழுது அவர்கள் கருதுவது எல்லா சிங்கள உயிர்களும் சந்தோசமாக வாழவேண்டுமென்பதுதான்'.

" பத்திரிகைகளில் நூற்றுக்கணக்கானவர்கள் சுட்டுக் கொல்லப்-பட்டார்கள் என்பதையும் ஆனால் அவர்கள் பயங்கரவாதிகள் அல்ல என்-பதையும் அறிந்த பின்பும், அப்பாவி மக்கள் பட்டினியால் வாடும் பொழுதும், 61 மணித்தியால ஊரடங்குச் சட்டங்களினால் குழந்தைகளுக்கு பால்-உணவுகூட வாங்க முடியாமல் அவர்கள் உத்தரிக்கும் பொழுதும் நாம் எப்படிச் சந்தோசமாக இருக்க முடியும்? இல்லை நாம் சந்தோசமா இருக்க முடியாது. எமது இதயங்கள் வேதனையால் நிறைந்திருக்கின்றன. எமது கவலைகளுக்கு எல்லையில்லை."

சிங்கள பேரினவாதப் பெருக்குக்கு எதிராகச் சில சிங்கள முற்போக்கு வாதிகளின் எதிர் நீச்சலையே விஜய குமாரதுங்காவின் பேச்சு எடுத்துக்காட்டுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## AN APPEAL

"Prohibited Zone" Emergency Regulatio--ns which came in to force on 30th Nov. 1984 had made nearly 100.000 Tamils in North of Sri lanka,refugees in their own homeland.They urgently need cash,food, cloths and drugs.

SÜDASIEN BURO ev. is collecting funds for the above purposes.Donors may send their contributions to the following bank account:

Code word:JAFFNA,Kto.Nr.:268540
BLZ 330 500 00,Stadtsparkasse,Wuppertal.

For further information:Südasien-Büro
Kiefernstr.45
56 Wuppertal 2.
Tel: 0202-507156.

---


## SINTHANAI

Estd:1985. No:1/85.

Editor:P.Kumarasamy.

All comunications shall be addressed to:
Editor,
"SINTHANAI",
Olgastr.49,
7000 Stuttgart 1.
West Germany.

25.Feb.1985.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# INTERNATIONAL WOMEN'S DAY

## MARCH 8



மாறுதல் வருமென்பதில்
மாற்றமேயில்லை

— கார்ல் மார்க்